பதிவு எண் : (      ) Register No

நேரம் : 40 நிமிடங்கள்

வகுப்பு : ___________

மதிப்பெண்கள் : 20

தேதி : ___________

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கவனமாகப் பார்! படத்தை அடிப்படையாகக் கொண்டு 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கதை எழுது. படத்தின் அடியில் உள்ள சொற்களை நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| சந்தைக்கு | கூட்டமாக |
| சத்தமாக | பல கடைகள் |
| காய்கறிகள் | பைகளைத் தூக்க |
| முட்டைகளில் | உடைந்துவிட்டன |
| கோபமாக | தவற்றை |
| மன்னிப்பு | பணம் கட்டினார் |

PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT 2 - 2013

TAMIL LANGUAGE

PAPER 2

PRIMARY 3

பெயர்: ______________________ (        )

வகுப்பு: (        )

தேதி : ______________________

பெ.கை.: ______________________

## சொற்பொருள்

கீழ்க்காணும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (5 மதிப்பெண்கள்)

ஒரு நகைக்கடையில் திடீரென்று முகமூடி அணிந்த திருடர்கள் இருவர் நுழைந்தனர். ____(1)____ என்ன ஆபத்து வருமோ என்று அனைவரும் பயந்தனர். ____(2)____ ஒருவன் பணியாளரிடம் கத்தியைக் காட்டி மிரட்டினான். மற்றொரு திருடன் அங்கிருந்த ____(3)____ எடுத்துப் பைக்குள் போட்டான். அங்கே இருந்தவர்கள் பயத்தில் நடுங்கினர். திருடர்கள் ____(4)____ கடையை விட்டு வெளியேறினான். அவர்கள் நகைக்கடையின் வெளியே இருந்த ____(5)____ தப்பித்துச் சென்றனர். நகைக்கடை முதலாளி உடனே காவலர்களுடன் தொடர்பு கொண்டார்.

1. 1) திருடர்களால் 2) திருடர்களுக்கு
   3) திருடர்களை 4) திருடர்களோடு ( )

2. 1) அவர்களுடைய 2) அவர்களுக்கு
   3) அவர்களை 4) அவர்களில் ( )

3. 1) நகைகளுக்கு 2) நகைகளோடு
   3) நகைகளிலிருந்து 4) நகைகளை ( )

4. 1) நகைகளால் 2) நகைகளோடு
   3) நகைகளுக்கு 4) நகைகளிலிருந்து ( )

5. 1) வாகனத்துக்கு 2) வாகனத்தை
   3) வாகனத்திலிருந்து 4) வாகனத்தில் ( )

செய்யுள் (5)

கீழ்க்காணும் செய்யுளை நிறைவு செய்வதற்கு மிகச் சரியான சொல்லைத் தேர்ந்தெடு எழுது.

6. நன்றி ____________________

7. ______________ ஒழுகு.

8. ஐயம் இட்டு ____________________ .

9. ____________________________ சினம்.

10. ______________________ துயில் எழு.

| | | |
|---|---|---|
| வைகறை | ஆறுவது | உண் |
| ஒப்புரவு | மறவேல் | எண்ணெழுத்து |

/5

## மூவிடப் பெயர்கள்

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுது. (5)**

11. நாங்கள் எங்கள் வீட்டுப்பாடத்தை முடித்துவிட்டோம்..

_______________ உன் வீட்டுப்பாடத்தை முடித்துவிட்டாயா?

12. நான் தேர்வில் சிறப்பாகச் செய்தேன்.

அவன் தேர்வில் சிறப்பாக _______________.

13. அது மானைத் துரத்திச் சென்றது

_______________ மானைத் துரத்திச் சென்றார்கள்.

14. அவன் அந்தப் புத்தகத்தை எங்கே வைத்தான்?

_______________ அந்தப் புத்தகத்தை எங்கே வைத்தீர்கள்?

15. சிறுவர்கள் வேகமாக ஓடுவார்கள்.

குதிரைகள் வேகமாக _______________.

## ஒலி வேறுபாடு

கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. (5 மதிப்பெண்கள்)

16. தலைமையாசிரியர் எனக்குப் பரிசு ________________ .

1) அளித்தார் 2) அழித்தார் ( )

17. பறவை ________________ தேடி அலைந்தது.

1) இரை 2) இறை ( )

18. ________________ பாம்புடன் சண்டையிட்டது.

1) கீரி 2) கீறி ( )

19. விளக்கின் ________________ கண்ணைக் கூசச் செய்தது.

1) ஒலி 2) ஒளி ( )


20. அழகான ________________ மலர்கள் பூத்திருப்பதைப் பார்.

1) அல்லி 2) அள்ளி ( )

விளம்பரத்தைப் படி: (6)

## விடுமுறை ஓவிய வகுப்பு

> *விடுமுறையில் அழகான ஓவியங்களை வரைய விருப்பமா?*




திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை

ஒவ்வொரு நாளும் இந்த நேரங்களில் வகுப்புகள் உள்ளன.

காலை **10.00- 12.00**

பிற்பகல் **2.00 – 4.00**

மாலை **6.00 – 8.00**

நடைபெறும் இடம்: புக்கிட் கோம்பாக் சமூக நிலையம்

மேல் விவரங்கள் தெரிந்துகொள்ள,
தொடர்புக்கு: **95432167**

21 எந்த வயதுடையவர் ஓவியப் போட்டியில் கலந்து கொள்ளமுடியும்?

1. இரண்டு
2. ஒன்பது
3. பதினான்கு ( )

22. எந்தக் கிழமைகளில் வகுப்பு இல்லை?

1. வெள்ளிக்கிழமையும் திங்கட்கிழமையும்
2. சனிக்கிழமையும் வெள்ளிக்கிழமையும்
3. சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் ( )

23. முதல் வகுப்பு எத்தனை மணிக்குத் தொடங்கும்?

1. காலை 10.00
2. மதியம் 12.00
3. மாலை 4.00 ( )

*முன்னுணர்வுக் கருத்தறிதல்*

***<u>கீழ்க்காணும் பகுதியில் 5 கோடிட்ட இடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு ஏற்ற சரியான சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுதுக.(5 மதிப்பெண்கள்)</u>***

அன்று ஞாயிற்றுக்கிழமை திரு மாதவன் ஓய்வாக இருந்தார். அவர் தன் மகனிடம் கூறியபடி அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்லக் கிளம்பிக்கொண்டிருந்தார். திருமதி மாதவன் அவர்களுக்குத் தேவையான 24. (____) எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். அப்போது அண்டை வீட்டுக்காரர் திருமதி லீ கதவை 25. (____). அவர் வருத்தத்தோடு காணப்பட்டார். அவர் தம் குழந்தைக்கு உடல் நலமில்லை என்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல உதவி வேண்டும் என்றும் கேட்டார். திரு மாதவன் உடனே அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து 26. (____). பின்னர் வீடு திரும்பிய அவர் 27. (____) காணப்பட்டார். அதை 28. (____) மகன். "பரவாயில்லை அப்பா. நாம் அடுத்த வாரம் கடற்கரைக்குப் போகலாம்," என்றான்.

| | |
|---|---|
| 1) பொருள்களை | 6) யோசித்தார் |
| 2) களைப்பாக | 7) அடித்தார் |
| 3) திறந்தார் | 8) கவனித்த |
| 4) வந்தார் | 9) தட்டினார் |
| 5) சென்றார் | 10) மகிழ்ச்சியாக |

## தெரிவுவிடைக் கருத்தறிதல் (  மதிப்பெண்கள்)

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ஒரு வாத்தும் ஒரு பெட்டைக்கோழியும் நட்பாக இருந்தன. இரண்டும் இணைபிரியாத **நண்பர்கள்.** ஒருமுறை பெட்டைக்கோழி பத்து முட்டைகள் இட்டது. சில நாட்கள் சென்றன. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளி வந்தன. வாத்து, கோழிக்கு உதவியாகக் குஞ்சுகளைக் கவனித்துக் கொண்டது.

ஒரு நாள் ஒரு காட்டுப்பூனை அங்கு வந்தது. அது கோழிக்குஞ்சுகளைப் பிடித்துத் தின்ன ***ஆசைப்பட்டது.*** காட்டுப்பூனை தனக்கு உதவும்படி வாத்தைக் கேட்டது. வாத்து மறுத்து விட்டது. வாத்து நல்ல ***மனம்*** உடையது. அது "குவாக் குவாக்" என்று உரக்கக் கத்தியது. அதனால் தூங்கிக் கொண்டிருந்த கோழியும் அதன் குஞ்சுகளும் விழித்துக் கொண்டன.

அவை எல்லாம் சேர்ந்து இரைச்சல் போட்டன. காட்டுப்பூனை *பயந்து* ஓடிவிட்டது. தன் குஞ்சுகளைக் காப்பாற்றிய வாத்துக்குக் கோழி நன்றி கூறியது.

பொருத்தமான விடையைத் *தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.*

29. பெட்டைக்கோழியின் நண்பன் எது?

(1) கோழிக்குஞ்சுகள்
(2) வாத்து
(3) காட்டுப்பூனை
(4) பெட்டைக்கோழி ( )

30. வாத்து கோழிக்கு எப்படி உதவியது?

(1) அது பத்து முட்டைகள் இட்டது.
(2) அது கோழிக்குஞ்சுகளைக் கவனித்துக் கொண்டது.
(3) அது கோழிக்குஞ்சுகளைத் தின்றது.
(4) அது காட்டுப்பூனையைக் கொன்றது. ( )

31. காட்டுப்பூனை என்ன செய்ய ஆசைப்பட்டது?

(1) அது கோழிக்குஞ்சுகளைப் பிடித்துத் தின்ன ஆசைப்பட்டது.
(2) அது உரக்கக் கத்த ஆசைப்பட்டது.
(3) அது கோழிக்குஞ்சுகளைக் கவனித்துக் கொள்ள ஆசைப்பட்டது.
(4) அது தூங்க ஆசைப்பட்டது. ( )

32. வாத்து எப்படிப்பட்ட மனம் உடையது?

(1) வாத்து நல்ல மனம் உடையது.
(2) வாத்து கெட்ட மனம் உடையது.
(3) வாத்து பயந்த மனம் உடையது.
(4) வாத்து தீய மனம் உடையது. ( )

33. கோழி ஏன் வாத்துக்கு நன்றி கூறியது?

(1) வாத்து பயந்து ஓடியதால்
(2) வாத்து குஞ்சுகளைக் காப்பாற்றியதால்
(3) காட்டுப்பூனை வந்ததால்
(4) வாத்து காட்டுப்பூனைக்கு உதவியதால் ( )

*சொற்பொருள்*

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடைப்பினுள் எழுது. ( மதிப்பெண்கள்)

34. **நண்பர்கள்**

1. உறவினர்கள்
2. சிநேகிதர்கள்
3. அன்பர்கள்
4. சிறுவர்கள் ( )

35. ஆசைப்பட்டது

1. விருப்பபட்டது
2. கோபப்பட்டது
3. கேள்விப்பட்டது
4. காட்டப்பட்டுது ( )

36. மனம்

1. அழகு
2. வடிவம்
3. குரல்
4. உள்ளம் ( )

37. பயந்து

1. பரிதாபம் கொண்டு
2. உற்சாகம் கொண்டு
3. சினம் கொண்டு
4. அச்சம் கொண்டு ( )

8. சுயவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)
கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படித்துக் கேள்விகளுக்கு விடை எழுது.

திரு ராமு தன் குடும்பத்துடன் ஒரு பேரங்காடிக்குச் சென்றார். அவரின் புது வீட்டிற்குப் பல மின்சாரப் பொருள்கள் வாங்க அங்கே சென்றார்.

முதலில் அவர்கள் மின்னியல் பொருட்கள் விற்கின்ற பகுதிக்குச் சென்றனர். அங்கே குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், மின் அடுப்புகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிகள் போன்றவை இருந்தன. அங்கே திருமதி ராமு, ஒரு பச்சை நிற குளிர்சாதனப் பெட்டியைத் தேர்ந்தெடுத்தார். அவருக்குப் பச்சை நிறம் என்றால் மிகவும் பிடிக்கும்.

பிறகு அவர்கள் மின்தூக்கியில் ஏறி மேல்மாடிக்குச் சென்றார்கள். திரு ராமுவின் மகன் முத்துவிற்கு இசைக்கருவிகள் என்றால் மிகவும் விருப்பம். இசைக்கருவிகள் விற்கின்ற ஒரு கடையில் அவர்கள் முத்துவிற்கு ஒரு வயலின் வாங்கினார்கள். பின்னர், அவர்கள் மற்ற பகுதிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு திரும்பினார்கள்.

பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடையை எழுது.

38. திரு ராமு குடும்பத்தினர் *ஏன்* பேரங்காடிக்குச் சென்றனர்?

________________________________________

________________________________________

39. மின்னியல் பகுதியில் ***என்னென்ன*** பொருள்கள் இருந்தன?

________________________________________

________________________________________.

40. திருமதி ராமுவுக்குப் பிடித்த நிறம் *என்ன?*

________________________________________

________________________________________.

41. மேல் மாடிக்குச் செல்ல அவர்கள் *எதைப்* பயன்படுத்தினர்?

________________________________________

________________________________________.

42. அவர்கள் *ஏன்* முத்துவிற்கு வயலின் வாங்கினார்கள்?

________________________________________

________________________________________.

❊❊❊❊❊ முற்றும் ❊❊❊❊❊

P3

# TESTPAPER 14

<u>விடைகள் ( Primary 3 - SA 2 2013 )</u>

1. (1)  2. (4)  3. (4)  4. (2)  5. (4)

6. மறவேல்  7. ஒப்புரவு  8. உண்  9. ஆறுவது  10. வைகறை

11. நீ  12. செய்தான்  13. அவர்கள்  14. நீங்கள்  15. ஓடின

16. (1)  17. (1)  18. (1)  19. (2)  20. (1)

21. (2)  22. (3)  23. (1)

24. (1)  25. (9)  26. (5)  27. (10)  28. (8)

29. (2)  30. 2)  31. (1)  32. (1)  33. (2)

34. (2)  35. (1)  36. (4)  37.(4)

38. புது வீட்டிற்குப் பல மின்சாரப் பொருள்கள் வாங்க திரு ராமு குடும்பத்தினர் பேரங்காடிக்குச் சென்றனர்.

39. மின்னியல் பகுதியில் குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், மின் அடுப்புகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிகள் போன்றவை இருந்தன.

40. திருமதி ராமுவுக்குப் பிடித்த நிறம் பச்சை நிறம்.

41. மேல் மாடிக்குச் செல்ல அவர்கள் மின்தூக்கியைப் பயன்படுத்தினார்கள்.

42. முத்துவிற்கு இசைக்கருவிகள் என்றால் மிகவும் விருப்பம் என்பதால் அவர்கள் முத்துவிற்கு வயலின் வாங்கினார்கள்.